Ref: Makkal Kural dated 10.04.2015

# பெங்களூர் கார் பந்தய போட்டியில் பண்ணாரி அம்மன் கல்லூரி முதலிடம்



சத்தியமங்கலம், ஏப். 9–

ப்ரீஸ்கேல் செமிகண்டக்டர் இண்டியா நிறுவனம் நடத்திய கார் பந்தய போட்டியில், பண்ணாரி அம்மன் கல்லூரியை சேர்ந்த குழுவினர் முதல் இடம் பிடித்தனர்.

பெங்களூரிலுள்ள ப்ரீஸ்கேல் செமி கண்டக்டர் இண்டியா நிறுவனம் ஆண்டுதோறும் ப்ரீஸ்கேல் கோப்பை என்னும் கார் பந்தய போட்டியினை நடத்தி வருகிறது. இப்போட்டியானது முதன்மைச்சுற்று, இறுதிச்சுற்று என, இரண்டு சுற்றுகளாக நடத்தப்பட்டு வருகிறது. இந்த ஆண்டுக்கான போட்டி, பெங்களூரில் உள்ள இந்திய அறிவியல் கழகத்தின், டாடா நினைவு அரங்கத்தில் நடத்தப்பட்டது.

## முதல் பரிசாக ரூ.2 லட்சம்

இப்போட்டியில், 40 பொறியியற் கல்லூரிகளிலிருந்து மொத்தம் 120 அணிகள் கலந்து கொண்டன. இவற்றில் 10 அணிகள் இறுதிச்சுற்றுக்கு தகுதி பெற்றன. இறுதிச்சுற்றுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 10 அணிகளில், பண்ணாரி அம்மன் தொழில் நுட்பக் கல்லூரியும் தேர்வு செய்யப்பட்டது. இந்திய அறிவியல் கழகத்தில் நடைபெற்ற இறுதிச் சுற்றில், சத்தியமங்கலம் பண்ணாரி அம்மன் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் ந.ஜவகர், எம்.ஞானமூர்த்தி மற்றும் உதவி பேராசிரியர் நிர்மல்குமரா குழு, முதல் பரிசாக ரூ.2 லட்சம் பெற்றது.

இந்த ஆண்டு இந்தியா சார்பாக, இறுதிச்சுற்றில் பண்ணாரி அம்மன் தொழில் நுட்பக் கல்லூரி குழு ஜெர்மனியில், கலந்து கொள்ள உள்ளது. வெற்றி பெறும் அணிக்கு, இரண்டாம் பரிசாக ரூ.1 லட்சமும், மூன்றாம் பரிசாக ரூ.50 ஆயிரமும் மற்றும் ஆறுதல் பரிசாக ரூ.25 ஆயிரம் ஒரு அணிக்கும் வழங்கப்பட்டது.

பண்ணாரி அம்மன் தொழில்நுட்பக் கல்லூரியில், மின்னனுவியல் மற்றும் தொடர்பியல் துறையில் ப்ரீஸ்கேல் எம்பெடட் சிஸ்டம் ஆய்வகமானது, புரிந்துணர்வு கடித ஒப்பந்தத்தின் வாயிலாக, ப்ரீஸ்கேல் நிறுவனத்தின் மூலம் 2009 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.